'PHONE No. 55630 விலை அரை அணா REGD. No. M. 6311

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஞாயிறு 13—12—53 | தனி இதழ் | வெளியூர்: திங்கள் 14—12—53

வெற்றிக்குப் பிறகே!

★

"தி. மு. கழகம், கண்ணீரோடு பிறந்தது; ஆகவே, சாகிற நேரத்திலே, அது நிச்சயம் சிரித்துக் கொண்டேதான் சாகும்—சாகுமென்றால், தன்னுடைய இலட்சியத்தில் முழு வெற்றி கண்ட பின்பேதான் கண் மூடும்."

—மதியழகன் வரவேற்புக் (சென்னை) கூட்டத்தில் அண்ணாதுரை (10—12—53)

வாடா மலர் மாலை தாருங்கள்!

★

பொதுச் செயலாளர் அறிக்கை

★

மலர்மணம் தரும் மகிழ்ச்சியைவிட, தோழர்களே! உமது மலர்ந்த முகம் அதிக மகிழ்ச்சி அளிக்கிறது; சிறை சென்று மீண்ட எங்களை அன்பு மலர் தூவி வரவேற்று, அகமகிழ்கிறீர்கள்—நன்றிகூறிக் கொள்கிறேன்.

[illegible] வரவேற்புக் கூட்டங்கள் மூலம், நாடெங்கும் உள்ள நமது தோழர்களைக் கண்டு அளவளாவ விருப்பமிருப்பினும், சர்க்கார் மிக விரைவில், இந்த நமது தொடர்பைக் கத்தரித்துவிடக் கூடும் என்ற அச்சம் கொள்கிறேன்—வழக்கு மிரட்டிய வண்ணம் இருக்கிறது — எனவே, எல்லா ஊர் வரவேற்புக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, உங்கள் அன்பைப் பெற்று, என் கருத்தினை வழங்கும் வாய்ப்பு பெறுவதற்கில்லை. எனவே, இந்த மடல் மூலம் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று திங்கள் சிறைவாசம், வேறு வகையிலே, தொல்லை தருவதாக அமையவில்லை என்ற போதிலும், உங்களை எல்லாம் விட்டுப் பிரிந்திருக்கும் வகையிலே தாங்கொணாச் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால், அந்த மூன்று திங்களில், நமது தோழர்கள், தளராத ஊக்கம் காட்டி, கழகத்தை இமை காப்பதுபோலக் காத்து, சீரிய முறையிலே பணியாற்றியது, கேட்டு, பெருமை அடைகிறேன்.

அடக்குமுறையைக் கண்டு அஞ்சாத பண்பும், கேலிமொழி கேட்டுச் சோர்வடையாத தன்மையும், பலாத்காரத்தை அறவே வெறுத்து ஒதுக்கும் கண்ணியமும், மெச்சத் தகுந்த அளவு வளர்ந்திருக்கிறது—பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடுத்திருக்கும்—அறப்போரில் கலந்துகொள்ளும் அரிய வாய்ப்பு பெற்ற எல்லாத் தோழர்களுக்கும், அந்த அறப்போருக்கு ஆக்கம் தேடித்தந்த அனைவருக்கும் என் நன்றியறிதலைக் கூறிக்கொள்கிறேன்.

மாச்சரியத்தால் மனக்குழப்ப மடைந்துள்ளவர்களும், அழுக்காறால் அலலறபடுபவர்களும், எவ்வளவுதான் முயன்றாலும், நாம நடாத்திய அறப்போரின் மாண்பினையும், அது அளித்துள்ள செம்மைப் பயனையும் மாய்த்திட முடியாது. நாட்டு நிகழ்ச்சி நிகண்டிலே, அந்த அறப்போர், சேர்க்கப்பட்டாகிவிட்டது— இனி, அதன்மீது தூசு தடவி மாசுபடுத்தப் பார்ப்பது பேதமை—வேறு உருவான செயல ஏதும் செய்ய இயலா நிலையினர், அந்தப் பயன்தராத காரியத்தில ஈடுபடட்டும்—கவலை இல்லை.

தி. மு. கழகம், திடீர்ப் போராட்டங்களில் குதித்திடும் அமைப்பு அல்ல. போராட்டத்தைத் தேடி அலையும் நிலையிலே உள்ள கழகம் அல்ல.

[illegible] ஆக்க வேலையிலே ஆர்வத்துடன் ஈடுபட்டு, மக்களிடையே மகத்தான ஓர் அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டிவந்த கழகமாகும்.

[illegible] மாளிகைக்குடையோன், அயர்ந்திருக்கும் வேளையில், வெள்ளிக் கிண்ணத்தில் உள்ள சந்தனத்தை வேக வேகமாக வழித்தெடுத்து, மார்பிலே பூசிக்கொள்ளும் வேலையாள்போல, கிளர்ச்சிச் சேற்றைக் கலக்கிக் கொண்டிருக்கும் போக்கை, தி. மு. கழகம் என்றுமே கொண்டதில்லை. அதேபோது, உள்ளத்திலே சரி எனப் பட்டதும், அறப்போர் தேவை என்பது தெளிவாகத் தெரிந்ததும், கஷ்ட நஷ்டம் ஏற்கத் தயங்கியதுமில்லை.

தடை உத்திரவுகளைத் தி. மு. கழகம் தவிடுபொடியாக்கி இருக்கிறது.

தடியடிகளைத் தி. மு. கழகம் தாங்கிக்கொண்டிருக்கிறது. வடநாட்டு ஆதிக்கக் கண்டனக் குறியாக, வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி காட்டி, ஆதிக்கக்காரர் தாக்கியபோது, குருதி கொட்டி இருக்கிறது.

சிறை புக, தி. மு. கழகம் அஞ்சியதில்லை, தியாகத் தழும்புகள் நிரம்ப உள்ளன.

இவ்வளவுக்கும்; தி. மு. கழகம் போராட்டம் நடத்தித்தான் உயிர் பிழைக்க வேண்டும் என்ற நிலையில் இல்லை—இதை கவனத்தில் இருத்தவேண்டும்

தி. மு. கழகப் பிரசாரம் நடைபெறாத நாளில்லை, அதன் கொள்கை புகாத சிற்றூர் இல்லை.

பேரூர்களிலும், பட்டி தொட்டிகளிலும், தி. மு. கழகக் கிளைகள் தழைத்துள்ளன-எங்கும் அமைப்பு முறையும் நடவடிக்கையும், ஜனநாயக முறையிலே அமைந்துள்ளன.

தி. மு. கழகம் நடத்திய மாவட்ட மாநாடுகள், மாவட்ட மக்களை எழுச்சியுறச் செய்துள்ளன. மாநில மாநாடோ, கண்டவர் யாரும் மறக்கொணாத காட்சியாக அமைந்திருந்தது.

தி. மு. கழகம் நடாத்தும் ஏடுகள், பெரும் பாறைகளைப் பிளந்தெறியும் சிற்றுளிகள்.

தி. மு. கழகத்தினர் வெளியிடும் நூல்களோ, இருளை விரட்டிடும் அணையா விளக்குகள்.

கலைத்துறையிலே, தி. மு. கழகம் புகுத்திய புதுமை கண்டு, பழமை விரும்பிகள் பதைக்கின்றனர்.

மாணவர் படையும், உழைப்பாளர் அணிவகுப்பும், தாய்மார்கள் வரிசையும், எழிலோவியங்களாக அமைந்துள்ளன.

மாற்றுக் கட்சியின் வாதங்களை கொளுக்கித் தள்ளும் சம்மட்டி அடிபோன்ற பேச்சினை, நாள்தோறும், நமது தோழர்கள், நாட்டிலே நிகழ்த்தி வருகிறார்கள்—வெற்றிப் பாதையை அமைத்துத் தருகிறார்கள்.

இந்நாட்டு, வெளிநாட்டு, நிகழ்ச்சிகள், பிரச்னைகள் குறித்து, நாம் என்ன விளக்கம் அளிக்கிறோம், என்பதை அறியும் ஆவலுடன் நாடு இருந்துவருகிறது. தி. மு. கழகம் நடாத்திடும் பலகலைக் கழகமாக, புதுமைக் கலாமன்றமாக, பொறுப்புணர்ச்சியோரின் முகாமாக, ஜனநாயக கோட்டமாக, அறப்போர் வீரரின் பாசறையாக, விடுதலைப் படையின் அணிவகுப்பாகத் திகழ்கிறது.

இத்துணைக்கும் பணபலம் அற்றது, கழகம் —ஒவ்வொரு காரியத்துக்கும், உண்டிச் செம்பு தூக்கவேண்டிய நிலையிலே இருப்பது.

கழகக் காரியத்துக்கே பணமுடை ஏற்படுகிறது என்றாலும், நாட்டு மக்களின் தேவைகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும், அல்லலைத் துடைக்கும் அருங்காரியத்திலே தன் பங்கினைச் செலுத்தவும், தி. மு. கழகம் தவறியதில்லை. கலவி நிலையங்கள் பல, தி. மு. கழகத்தின் உதவியைப் பெற்றுள்ளன; கடும் புயலிலே சிக்கிய தஞ்சைத் தரணிக்கும் நாம் ஓரளவு உதவி அளித்திருக்கிறோம்; பெருமையும், மகிழ்ச்சியும் அளிக்கும் விதமாகக் கைத்தறியாளரின் கஷ்டத்தைத் துடைத்திடும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறோம்.

பிரச்சாரத் துறையில மட்டுமே பொலிவுடன் இருக்கக் கூடிய கட்சிகள் சில; போராட்டங்களை மூட்டிவிட்டு, அந்த நெருப்பருகே கிடைக்கும் ஒளி மூலமே பொலிவு பெறும் கட்சிகள் சில; தி. மு. கழகம் இரு முனைகளிலும் பணியாற்றும் தன்மை படைத்தது என்பதை இப்போது நாடு அறிந்து கொண்டது; நல்லோர் மறுத்திடார்.

முதல் கட்டம் வெற்றிகரமாக நடந்தேறி இருக்கிறது; இந்த மகிழ்ச்சி, முறையான மற்றக் கட்டங்களில் புகவும், அறப்போரில் வெற்றி பெறவும் உறுதுணையாக அமையும். எனவேதான், இடை நாட்களில், நாம் நமது நோக்கும் போக்கும், நடாத்திய போராட்டங்களின் மூலம் கிடைத்த பயனும், எத்தகையன என்பதை அறிந்து கொள்ளவேண்டும் என்று இதனைக் கூறுகிறேன்—வீணுரைக்கு அல்ல, நமக்கு அதற்கெல்லாம் நேரமில்லை!

நாங்கள் மட்டுமல்ல, ஏறத்தாழ ஐயாயிரவர் சிறைவாசம் கண்டனர்—சிந்தை நைந்து போகவில்லை!

நாங்களாவது, 'பி' வகுப்பு—ஓரளவு வசதி பெற்றோம் — ஏனையோர் கடுமையும், கொடுமையும் செறியும் 'சி' வகுப்பில் வாடினர்.

சிலருக்குக் 'களி'யும் தரப்பட்டது; கடும் வேலையும் செய்தனர்; எனினும் எதற்கும் எவரும் சளைக்கவில்லை, தாங்கிக் கொண்டனர், உரம் பெற்றுள்ளனர். இந்த நிலை, ஒரு விடுதலை இயக்கத்துக்குக் கிடைப்பது, சாமான்யம் அல்ல, நல்யாழுக்கு நரம்புகள் அமைத்தல் போன்றதாகும்!

தி. மு. கழகம் பேசும், உரத்த குரலில்! எழுதும், அழகு நடையில்! கூத்தாடும் கதை கூறும்! வேறென்ன செய்யும்? என்று கேட்டோர் உளர், அதனையும் செய்யாது!!

தி. மு. கழகம் பெரும் போர்த்திட்டம் வகுத்து, முறைப்படி பணியாற்றி, முதல் கட்டத்தைக் கடந்து நாட்டவர் முன் நிற்கிறது.

நாடாள்வோர், முறைப்படி, வேறு கட்டங்களை வகுத்திடும் வாய்ப்பை, எமக்கு அளிக்கக் கூடாது என்று எண்ணி, உயர்நீதி மன்றம் சென்றிருக்கிறது, மூன்று மாதத் தண்டனை போதாது, மேலும் தண்டிக்க வேண்டும் என்று, 'பெருந்தன்மையும், கண்ணியமும், அரசியல் நாகரிகமும், அந்த அளவுக்கு முற்றி இருக்கிறது! வாழ்க வல்லுனர்கள்!!

வழக்கு, எங்கள் தண்டனையை அதிகப் படுத்தச் செய்ய, என்றாலும, இதிலே ஒரு சட்டப் பிரச்னை நோக்கி நிற்கிறது, மிகமுக்கியமான பிரச்னை.

ஆச்சாரியார் இல்லத்தின் முன், நாம் நடாத்திய 'மறியல்' 341-வது செக்ஷன்படி, குற்றம் என்று மாஜிஸ்திரேட் கோர்ட்டிலே முடிவு இருக்கிறது. இது முடிந்த முடியானால், மறியல் செய்யும் உரிமையை வெள்ளையருடன் போராடிப் பெற்றோம், மற்றவருக்கும் அந்த உரிமையை நாங்கள் வழங்கி இருக்கிறோம் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறிக் கொள்ளும் பேச்சு, பொய்த்துப் போகும்; நாடு, வெள்ளையரைவிட ஆதிக்க வெறி அதிகமாகக் கொண்டோரிடம் சிக்கி இருக்கிறது என்பதை உலகறிய வைக்கும்.

உயர்நீதி மன்றத்திலே 'மறியல்' குற்றமுடையதுதானா, அல்லது, சட்ட சம்மதமானதா என்பது முடிவு செய்யப்பட வேண்டும். இது பற்றிய வழக்கு நடைபெறும் கட்டம் பிறந்திருக்கிறபோது, நாம் மறியலில் ஈடுபடுவது, உயர்நீதிமன்றத்திற்கு மதிப்பளிக்காத கண்ணியக் குறைவாகக் கருதப்படும். எனவே, கண்ணியத்திலே, எப்போதும் கவனம் செலுத்தும், நாம், 'மறியல்' பற்றிய தீர்ப்பு, உயர்நீதிமன்றத்தில் கிடைக்கும் மட்டும், பொறுத்திருப்பதுதான், பொறுப்பான செயலாகும்.

வழக்கு அடுத்த கிழமை எடுத்துக் கொள்ளப்படலாம், திங்கள் பிடிக்கலாம், குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லை. ஏறக்குறைய 'ஜவர்' விசாரணையில் இருந்துவரும் 'குற்றவாளிகள்' போன்ற நிலையில்தான் இருக்கிறோம். இந்த

(அடுத்த பக்கம் பார்க்க)

பொதுச் செயலாளர் அறிக்கை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், நாங்கள், வழக்குக் குறித்து விளக்கம் உரைப்பது கூடாது. பொதுநிலையைக் காட்டவே இதனைக் குறிப்பிட்டேன்.

சென்னையில் தி. மு. கழக மாவட்ட மாநாட்டிலே நான் பேசியபோது குறிப்பிட்டது, தோழர்களுக்கு நினைவிலிருக்கும் என்று எண்ணுகிறேன்

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு, நீண்ட காலத் திட்டமாகவே இருக்கும்—ஒரு தாக்குதல், வெற்றி அல்லது தோல்வி, என்ற முறையில் இராது; என்று நான் குறிப்பிட்டேன்.

அந்த நீண்ட காலத் திட்டத்திலே ஒரு கட்டம் கடந்திருக்கிறோம் — திட்டம், இந்தக் கட்டத்தோடு முடிந்து விடவில்லை; முடிந்துவிடாது. திராவிடச் சமுதாயத்தினர், அடக்குமுறையின் கோரப் பசிக்கு மேலும் பலியாக வேண்டிய—கஷ்டநஷ்டம் ஏற்கும் காலம் தொடரும், முடிந்து விடவில்லை. இப்போது இடைவேளை—வழக்கு மன்றத்திலே நிற்கிறோம்—சட்டப் பிரச்னை தீரவேண்டி இருக்கிறது.

இந்த முறை கூடும் சட்டசபையும், தனி அழகுடன் காணப்படும் என்கிறார்கள்!

அடிபணிந்தவர்கள், அடித்து விரட்ட, அலகாபாத் பண்டிதர் அபயம் அளிக்க, அரியாசனத்தில் அமருகிறார் ஆச்சாரியார். அவருடைய கல்வித் திட்டத்தைக் குறித்த கண்டனம் அங்கும் சட்டசபையிலே கிளம்புமாம்.

திராவிட சட்டசபைக் கட்சி பூத்திருக்கிறது. பாருலேகர் அறிக்கையை, சட்டசபையிலே, அலசிக் காட்டியும், புதிய கல்வித் திட்டம் படுதோல்வி அடைந்திருப்பதை எடுத்துக் காட்டியும், திராவிட சட்டசபைக் கட்சி, போராட இருக்கிறது.

புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்தொழிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கும் கம்யூனிஸ்டு கட்சியும், சட்டசபையிலே இந்தப் போராட்டத்தை நடத்தக்கூடும். எந்த முனையில் நின்று பார்த்தாலும், இந்தத் தடவை கூடும் சட்டசபை, ஆச்சாரியாரின் ஆட்சிக்கு இறுதி அறிவிப்புக் கூறுவதாக அமையுமாம்!

இவைகள் நடைபெற்றாலும், நடைபெறாவிட்டாலும், தி. மு. கழகம் தன் பணியினைத் தொடர்ந்து நடத்தும்.

வழக்கு முடிவு பெற்றதும், புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு குறித்து, முறை மாற்றுவதா வேண்டாமா என்பது பற்றியும், எவ்வகையிலே அறப்போர் நடத்துவது என்பது பற்றியும், பொதுக்குழு கூடி முடிவு செய்யும்.

இடைவேளையாக அமைந்துள்ள நாட்கள், மிகச் சிலவாகவே இருக்கும் என அஞ்சுகிறேன்.

இது சமயம் என் மனதுக்குப் பெரும் வேதனை தருவதாக இருப்பது, தூத்துக்குடிதான். வழக்கு நிதி, என் மனம் மகிழும் வண்ணம் வளரவில்லை. இடை நாட்களிலே, இந்த என் வேதனை தீரும்படி, வழக்கு நிதிக்கு ஆர்வத்துடன் பணத்தைச் சேர்த்தளியுங்கள். சாமான்யமான வழக்கு அல்ல. தி.மு.கழகத்தையே மிரட்டும், நெருக்கடி இது. இதன் தன்மையைத் தயை கூர்ந்து உணர்ந்து பணியாற்றுங்கள்.

வழக்கைச் சர்க்கார் வாபஸ் வாங்க வேண்டும் என்று வலியுறுத்தப்போவதாக, சட்டசபை திராவிடக் கட்சியினர், உறுதி கூறியிருக்கிறார்கள். 'அவர்கள் அறவுரையை ஆச்சாரியார் மதித்து நடப்பாரா என்பதிலே எனக்கு ஐயம்தான், எனினும், அவர்கள் அந்தத் துறையிலே முயற்சிப்பதை நான் தடுக்கவில்லை.

அது எப்படி ஆயினும், நாம் நமது கடமையைத் திறம்படச் செய்தாக வேண்டும். தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகள், நமக்குச் சர்க்கார் விடுத்துள்ள அறைகூவலாகும்.

எனவே, எம்மை வரவேற்க ஆவல் காட்டும் தோழர்களும், அறப்போரின் அடுத்த கட்டம் என்ன, எப்போது, எங்கு, என்று ஆர்வத்துடன் கேட்கும் தோழர்களும், இடை நாட்களாக அமைந்துள்ள இந்த வேளையில், கழகத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்க, முனைந்து பணியாற்றக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை நடத்தப்பட்ட அறப்போரிலே, தோழர்கள் காட்டிய வீரமும், ஆர்வமும் மகத்தானவை; அதே முறையிலே, இப்போதும் பணியாற்ற வேண்டும்; தூத்துக்குடி அழைக்கிறது, ஆச்சாரியார் அந்தத் துறையிலே நாம் எப்படிப் பணியாற்றுகிறோம் என்பதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்.

நாடு ஆதரிக்கிறது என்று கூறுகிறீர்களே, உங்கள் கழகத் தோழர்கள் மீது உள்ள சதி வழக்கை நடத்தும் பணம் திரட்டவாவது உங்களால் முடிந்ததா என்று ஆச்சாரியார் கேலிக் குரலில் பேசுவார். தோழர்களே! என்னையும் உங்களையும், தி. மு. கழகத்தையும், ஆச்சாரியார் கேலி செய்யும் நிலை ஏற்படக் கூடாது—நமது புகழுக்கு இழுக்கு ஏற்படலாகாது, எனவே, இன்றே சென்று இந்த நற்காரியத்தைக் கவனியுங்கள்.

அடுத்த கட்டத்துக்கு, தி. மு. கழகம் அழைப்பு அனுப்பு முன், இந்த இடைவேளைப் பணியைத் திறம்பட நடத்திக் காட்டுங்கள்.

இதிலே நீங்கள் காட்டும் ஆர்வம்தான், எமக்கு நீவிர் அளிக்கக் கூடிய, உண்மையான வரவேற்பு! வாடா மலர் மாலைகள்!!

அன்பன்,

அண்ணாதுரை,

12—12—'53.

'தூத்துக்குடி தோழர்கள் சிறையில்!

'அப்பா' எங்கே என்றால் ஆறுதல் கூற முடியாத தாய்மார் அங்கே!'

'நமக்காக வழக்காடுவதே இழுக்கு என்று கருதி இருந்த காலம் மலையேறி விட்டது'

"பணமா—இந்தா எடுத்துக்கொள்! பணமா—இந்தா போதுமா?' என்ற நிலை ஏற்பட வேண்டும்"

"தோழர்களே! மேலும், மேலும் நம் தொண்டும், பணியும், சொல்லையும் பலம் பெற வேண்டுமானால், நமது தோழர்கள் மீதுள்ள மாசினைத் துடைத்தாக வேண்டும்.

தூத்துக்குடி தோழர்கள் 96 பேர்மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. நாம் இங்கே, விழாவிலே நிறுத்தப்பட்டிருக்கிறோம்; அவர்கள், அங்கே, சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்! மறக்க வேண்டாம், நண்பர்களே, இதனை மறக்க வேண்டாம்! உங்களை நம்பியுள்ள அவர்களுக்குத் துரோகம் செய்யாதீர், தோழர்களே!

அந்த 96 தோழர்கள், இளைஞர்கள்; அவர்களுடைய சுவையூறு சுது குழந்தைகள், தாயைப் பார்த்து, 'அம்மா, அப்பா எங்கே?' என்று கேட்க, 'சிறையில்' என்று தாய் சொல்ல, 'ஏன் சிறையில்?' என்று குழந்தை திரும்பக் கேட்க, 'போலீசார் பிடித்துச்சென்றனர்' என்று, தாய் பதில் தர, 'போலீஸ் என்றால் என்னம்மா?' என்று, திரும்ப குழந்தை கேட்கு மானால, ஆறுதல் சொல்ல முடியாத தாய், அவள் சாதுவாக இருந்தால், முத்தம் கொடுத்துச் சமாதானம் செய்வாள் — முன் கோபியாக இருந்தால், முதுகிலே 'இரண்டு கொடுத்து' படுக்க வைப்பாள்.

"எனவே, மலர் மாலை அணிவித்தும், மகத்தான வரவேற்பும் தந்த தோழர்களே! ஒரு அணி வாங்கினால், அதிலே ஒரு அணா—உலையிலே அரிசி போடும் தாய்மார்கள், தூத்துக்குடி தோழர்களுக்கென ஒருபிடி அரிசி—ஒதுக்கி, அதனைப் பெருக்கித் தரவேண்டும். நிச்சயம், இந்த வழக்கிலே நாம் வெற்றி கண்டாக வேண்டும். இதிலே நாம் சொத்தையும் சோடையுமாகப் போனால், நிச்சயம் அதே வழக்கு, மாற்று உருவெடுத்து, மதியழகன், நடராசன் மீதோ, நெடுஞ்செழியன்; சம்பத் மீதோ, என் பேரிலோ வரலாம். நாட்டு நீதிபதிகளான உங்களின் நல்ல தீர்ப்பை, அப்போது தான், நேரு பண்டிதரும் உணருவார், காங்கிரசும் தெளியும்! ·

"தூத்துக்குடி சதி வழக்கிற்குச் செலவாக இருக்கும் முழு பணத்தையும் என்னாலேயே தர முடியும். எந்தச் சினிமாக் காரருக்காகிலும் இரு கதை எழுதித் தந்தால, என் வேலை முடிந்தது" அந்தப் பணம் பாமபு உருவானது; உங்கள உள்ளம் விரும்பி தரும பணம் தான், அவ்வழக்கிற்கு உகந்தது.

தூத்துக்குடி சதி வழக்கிற்குத் தேவை ரூ 20 000; இதுவரை கிடைத்துள்ளது ரூ. 7,000 உண்மையில திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிட்டால், நிச்சயம் வெற்றி பெறும் என்பதற்கு, இந்த நிதி சேர்ப்பு நமக்கு ஒரு அரிய வாய்ப்பு. இதில நாம் சோர்ந்தால், மாற்றார் நம்மை என்ன மதிப்பர்? 'நாட்டு விடுதலை வீரர்களை மீட்க அண்ணாதுரை பணம் கேட்டான்; கிடைக்கவில்லை'; என்று தானே கேலி மொழி வீசுவர்? எனவே, நீங்கள் தூத்துக்குடி வழக்கு வெற்றிபெற, தாராளமாக நிதி தாருங்கள்.

"தோழர் மதியழகன் குறிப்பிட்டார் — 'இதுவரை வழக்கிற்காக நிதியிலிருந்து ரூ. 2000 செலவாகிவிட்டது; மேலும், இன்று ரூ. 1,300 அனுப்ப வேண்டுமென்றும், வழக்கறிஞர்கள் தங்களுக்காக அதிகப் பணம் அனுப்பும்படி எனக்குக் கடிதம் எழுதியுள்ளதாகவும் சொல்லி, அவர் ஆத்திரப்பட்டார்.

இப்போதுதான் வழக்கறிஞர்கள் நம்மைக் கேட்கிற கட்டம்; இதற்குமுன், நம்முடைய வழக்கு என்றால், அவர்கள் வரவே மாட்டார்கள். நமக்காக வாதாடுவது, அவர்களுக்கு இழுக்கு என்று கருதியிருந்த காலமும் உண்டு. இதையும் தாண்டி நாம் நடந்தால், அவர்கள் பார்த்துப் பார்த்துப் பூரிக்கிற அளவுக்கு, 'வெள்ளித் தோட்டா'க்களை வீசினால், 'பணமா—இந்தா, எடுத்துக் கொள்,' 'பணமா—இந்தா, போதுமா,' என்கிற அளவுக்கு அவர்களுக்குத் தந்து நாம் வெற்றி பெற்றால், அடுத்த கட்டத்திலே நமது வழக்கு என்றால், 'வழக்காமே! நான் வரலாமா?' என்று வழக்கறிஞர்கள், நம் வீடு தேடி வரவேண்டிய நிலைமை ஏற்படும். இந்த நிலைமை நமக்கு மட்டுமல்ல; காங்கிரஸ் வரலாற்றின் ஆரம்பத்திலேயும் இப்படித் தான்!"

—மதியழகன் வரவேற்புக் கூட்டத்தில் அண்ணாதுரை

எம். என். ராய்—நேரு சந்திப்பு

டேராடூன், டிச. 12—

தீவிர ஜனநாயகக் கட்சித் தலைவர் எம். என். ராய் வீட்டிற்கு, பண்டித நேரு இன்று சென்று அவருடன் 15 நிமிடங்கள் தங்கியிருந்தார். நோய்வாய்ப்பட்டிருக்கும் எம். என். ராய் இன்னமும் படுத்த படுக்கையாகவே இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகின் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, [illegible] செட்டித் தெரு, [illegible]புரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை [illegible]